



அன்வர்

"மனசுக்குப் பிடிச்ச எந்த ஒரு விஷயத்தையும் காமிராவால் மட்டுமே பதிவுசெய்ய முடியும்! நிமிஷத்துக்கு நிமிஷம் பல மாறுதல்களுக்கு உட்படுகிற இந்த உலகத்தின் ஒவ்வொரு

# "அதிசயங்களை பதிவு செய்வேன்!"

அன்வர்



அசைவுமே அலாதிதான். அதைக் காலா காலத்துக்கும் பார்த்து ரசிக்கவைப்பது புகைப்படங்கள்தான்!"

– லயித்துப் பேசுகிற அன்வர், சென்னையின் பிரபல புகைப்படக் கலைஞர்களில் ஒருவர்.







"சொந்த ஊர், மதுரைப் பக்கத்தில் கோம்பை. சின்ன வயசிலேயே காமிரா மேல் ஒருவித காதல். எப்பவும் காமிராவோடதான் அலைவேன். சென்னைக்கு வந்து, லயோலாவில் விஷுவல் கம்யூனிகேஷன் சேர்ந்தேன். அந்தச் சமயத்தில் ஜர்னலிஸம் மேல் அவ்வளவு ஆர்வம். காலேஜ்ல நான் இருந்த நேரம் ரொம்பக் குறைவு. அனுபவம்தான் மனுஷனுக்குச் சிறந்த பாடம்னு நம்பறவன் நான். பல இடங்களுக்குப் போனேன்... பல பேரைச் சந்தித்தேன். மனசுக்குத் தோணற விஷயங்களையெல்லாம் காமிராவால் சுட்டுத்தள்ளினேன்.

ஜர்னலிஸம் மேல் இருந்த ஈடுபாட்டால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பத்திரிகைகளுக்கு எழுதினேன். விகடனிலும் எழுதியிருக்கேன். படங்கள் எடுத்துத் தந்திருக்கேன்.

இரண்டு வருஷம் 'பிஸினஸ்



இந்தியா'வின் புகைப்படக்காரராக வேலை பார்த்தேன்.

ஒரு தடவை, டி.வி-யில் மாளவிகா





சருக்கையோட நடனத்தைப் பார்த்தேன். தாங்கமுடியாத பிரமிப்பு. அவங்களோட அழுத்தமான நடன அசைவுகளைப் பதிவு பண்ணணும்னு என் மனசு துடிச்சது. ஸ்பெஷலா அனுமதி வாங்கி அவங்களை ஒரு நிகழ்ச்சியின்போது படம் பிடித்தேன்.

என் புகைப்படங்களைப் பார்த்து அசந்துட்டாங்க! 'உனக்கு டான்ஸ் தெரியுமா'னு கேட்டாங்க. தெரியாதுன்னேன். 'உனக்குள்ள ஏதோ ஒரு வகையில் டான்ஸ் கலந்திருக்கு. இல்லேன்னா இப்படிப்பட்ட புகைப்படங்கள் எடுக்கமுடியாது'னு பாராட்டினாங்க... நெகிழ்ந்து போயிட்டேன்..!"



— கண்கள் மின்னச் சொல்கிற அன்வர், முஸ்தபா, டி.டி.கே., சன்மார் போன்ற பல நிறுவனங்களுக்கு விளம்பரப் புகைப்படங்களையும் எடுத்திருக்கிறார்.

"ஒருமுறை ஆட்சியைக் கைப்பற்றிய வெற்றிக் களிப்பில் தொண்டர்கள் சூழ ஜெயலலிதா நடந்து வருவதைப் படம் பிடித்தேன். இத்தனை

வருடங்கள் கழித்தும் அதைப் பார்த்தால் உடனே அன்றைய காட்சி என் கண்முன் விரியும். அதுதானே சந்தோஷம்!

மாடலிங் போட்டோகிராபியும் ரொம்ப அற்புதமான விஷயம். கலர்களால் புகுந்து விளையாடி பார்ப்பவர்களைப் பரவசமாக்கிடலாம். ஒரு தடவை பரதக் கலைஞர் அனிதா ரத்னத்தை ஈரத்தலையோடு, கொஞ்சம் மஞ்சள் பின்னணியில் போட்டோ எடுத்தேன்.

க்ராஸ் பிராஸசிங் டெக்னிக்கைப் பயன்படுத்தி அந்த ஷாட் பண்ணினேன். 1995–ல் எடுத்த படம் அது. அப்ப அந்த டெக்னிக் அவ்வளவு பிரபலம் கிடையாது. கலர், மூட்னு எல்லாமே சரியா அமைஞ்சாக்கூட, பிரிண்ட் பார்த்தப்புறம்தான் அதோட ரிசல்ட் தெரியும். படத்தைப் பார்த்து அனிதாவே அசந்து போயிட்டாங்க.

ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைஞ்சிருக்கற மாதிரி மூணு கலைஞர்களை வைத்து ஒரு போட்டோ எடுத்தேன். மிரளும் கறுப்புப் பின்னணியில், டாப் ஆங்கிள்ல எடுக்கணும்னு முடிவு பண்ணி, ஒரு ஏணி மேல ஏறி நின்னு வித்தியாசமா எடுத்தேன். ஒரே ஒரு லைட் வெளிச்சத்தில் பிரமாதமாக அமைஞ்ச படம் அது.

எத்தனையோ விதமான புகைப் படங்களை எடுத்தாலும் என் ஆசை என் மண்ணோட உண்மைகளையும் அதிசயங்களையும் பதிவுசெய்ய வேண்டும் என்பது தான்.

ஒரு கிராமத்துத் திருவிழா, கரகாட்டம், கள்ளங்கபடமில்லாத கிராமத்து மக்கள் என பசுமையான கிராமத்தின் அழியாத அற்புதங்களையெல்லாம் ஒரு டாகுமெண்டரியா எடுக்கணும்னு மனசுக்குள்ள தீராத ஆசை. கூடிய சீக்கிரமே அதுக்கான முயற்சிகளில் இறங்குவேன்" என்கிறார் அழுத்தமான புன்னகையுடன்.



– அர்ச்சனா பரமேஸ்வரன்